21.05.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அதிக லாபம் தரும் "மா'



அதிக மகசூல் தரும் மா வளர்த்து விவசாயிகள் அதிக லாபம் ஈட்டலாம் என்று ஆரணி வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.எம்.சாந்தி அறிவுறுத்தியுள்ளார். ரகங்கள்: நீலம், பெங்களூரா, நடுச்சாலை, செந்தூரா, ஹிமாயூதின், காலேபாடு, ருமானி, மல்கோவா, பையூர் -1, அல்போசா சிந்து. வீரிய ஒட்டு ரகங்கள்: பெரியகுளம் -1, மல்லிகா, அமரப்பாலி, மஞ்சிரா, அர்கா அருணா, அர்கா புனீத், அர்கா நீல்கிரன், சிந்து சேலம், பெங்களூரா. மண்ணும், தட்பவெப்ப நிலையும்: நல்ல வடிகால் வசதி கொண்ட செம்மண் நிலம். மா பயிர் செய்வதற்கு ஏற்றதாகும் மண்ணின் கார அமிலத் தன்மை 6.5 முதல் 8 வரை இருக்க வேண்டும். மா நட ஜூலை முதல் டிசம்பர் வரை ஏற்ற பருவமாகும். நிலம் தயாரித்தல்: நிலத்தை நன்கு உழுது பின்பு 1 மீட்டர் நீளம், 1 மீட்டர் அகலம், 1 மீட்டர் ஆழம் உள்ள குழிகளை செடிகள் நடுவதற்கு 15 நாள்களுக்கு முன்னர் வெட்டி, பின்னர் குழி ஒன்றுக்கு 10 கிலோ தொழுஉரம், 100 கிராம் லின்டேன் உடன் மேல் மண் நன்கு கலக்கப்பட்டு குழியின் முக்கால் பாகம் வரை மூட வேண்டும். ஒட்டுச் செடிகளை நடுதல் - இடைவெளி:

ஓட்டுச் செடிகளை குழிகளின் மத்தியில் நட வேண்டும் செடிக்குச்செடி 6 முதல் 10 மீட்டர் வரை இடைவெளி விட வேண்டும். அடர் நடவு முறையினை (10 ஷ் 5 மீ) அல்போன்சா, பங்கனப்பள்ளி, மல்லிகா போன்ற ரகங்களில் பின்பற்றலாம். செடிகள், நன்றாக வளரும் வரை அடிக்கடி நீர்ப் பாய்ச்ச வேண்டும். மேலும் பயிறு வகைகள், நிலக்கடலை, காய்கறிகள் போன்றவற்றை ஊடுபயிராகப் பயிரிடலாம். ஒரு மரத்துக்கு ஒரு கிலோ உரமிட வேண்டும். உரங்களை செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் செடிகளின் வயதிற்கேற்ப செடிகளின் அடிப் பாகத்திலிருந்து 45 முதல் 90 செ.மீ தூரத்தில் இட்டு, பின் அவற்றை மூடி நீர்ப் பாய்ச்ச வேண்டும். ஒரு ஹெக்டருக்கு இட வேண்டிய சத்துக்கள் (கிலோ ஒரு மரத்துக்கு) முதல் வருடத்துக்கு தழை 0.2, மணி 0.2, சாம்பல் 0.3, 6 வருடங்களுக்குப் பிறகு தழை 1, மணி 1, சாம்பல் 1.5. காம்ப்ளக்ஸ் 10:26:26 அளவிலும் இட வேண்டும். யூரியா இட வேண்டிய அளவு (கிலோ ஒரு மரத்துக்கு) முதலாம் ஆண்டும், வருடந்தோறும் காம்ப்ளக்ஸ் 12, யூரியா 0.2, 6 வருடங்களுக்குப் பிறகு காம்ப்ளக்ஸ் 4.0, யூரியா 1.3, பொட்டாஷ்0.840.

**<u>சுரைக்காய் சாகுபடி மூலம் கோடையில் பயன் பெறலாம்</u>**



உடலுக்கு குளிர்ச்சி தரும் சுரைக்காயை விவசாயிகள் பெருமளவில் சாகுபடி செய்து பயன்பெறலாம் என தோட்டக் கலைத் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். சுரைக்காய் உடல் சூட்டை தணித்து குளிர்ச்சியை தரும் தன்மை கொண்டது. இதனால் கோடைக் காலத்தில் சுரைக்காயை அதிகளவில் மக்கள் வாங்கி பயன்படுத்துவது வழக்கம். சுரைக்காய் வளர்ச்சிக்கு மண்ணின் காரம், அமிலத் தன்மை 6 முதல் 7 சதவீதமாக இருப்பது நல்லது. பொதுவாக இதனை அனைத்து வகையான மண்ணிலும் சாகுபடி செய்யலாம். ஆனால் நல்ல வடிகால் வகைகளும்

சாகுபடிக்கு ஏற்றவையாகும். இது வெப்ப மண்டலப் பயிராகவும், வறட்சியைத் தாங்கி வளரும் தன்மை கொண்டதாகவும் உள்ளது. சில பகுதிகளில் மரங்கள்,வேலிகளில் படர்ந்தும் வளரும். சுரைக்காயின் ரகங்கள்: கோ.1, பூசா சம்மர் பிராலிபிக் லாங், பூசா சம்மர் பிராலிபிக் ரவுண்ட், பூசா நவீன், பூசா சந்தேஷ், பூசா மஞ்சரி போன்ற ரகங்கள் உள்ளன. நிலம் தயாரித்தல்: நிலத்தை 3 முதல் 4 முறை நன்றாக உழுது கடைசி உழவின்போது ஹெக்டேருக்கு 20 முதல் 25 டன் மக்கிய தொழு உரம் இட வேண்டும். பின்னர் 2.5 மீட்டர் இடைவெளியில் 60 சென்டி மீட்டர் அகலமுள்ள வாய்க்கால் தயார் செய்ய வேண்டும். அதில் 2.5 மீட்டர் இடைவெளியில் 50 கிராம் கலப்பு உரமிட்டு மேல் மண்ணுடன் கலந்து குழிகளை நிரப்ப வேண்டும். இதையடுத்து குழிக்கு 5 விதைகள் வீதம் ஊன்ற வேண்டும். விதையளவு: ஒரு ஹெக்டேருக்கு 3 முதல் 4 கிலோ விதையை விதைக்கலாம். பின் செய் நேர்த்தி: சுரைக்காய்க்கு வாரம் ஒரு முறை நீர்ப் பாய்ச்ச வேண்டும். விதை முளைப்புக்கு முன் குடம் வைத்து தண்ணீர் ஊற்றவேண்டும். வளர்ந்த உடன் வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். விதை ஊன்றிய 20 முதல் 30 தினங்கள் கழித்து களைகளை எடுத்து சுத்தம் செய்து ஒரு ஹெக்டேருக்கு 20 கிலோ தழைசத்தை மேலுரமாக இட்டு மண் அனைத்து தண்ணீர் பாய்ச்ச வேண்டும். கொடிகள் நிலத்தில் படருவதால் மழைக்காலங்களில் பாதிப்பு இல்லாமல் இருக்க சின்ன குச்சிகளை ஊன்று கோலாக பயன்படுத்தி நிலத்தில் படாமல் பாதுகாக்கலாம். இதன் மூலம் அழுகல் நோய் வராமல் தடுக்கலாம். அறுவடை: சுரைக்காய் முற்றுவதற்கு முன்பாகவே அறுவடை செய்து விட வேண்டும். விதை ஊன்றி 70 நாள்களில் முதல் அறுவடை செய்யலாம். மகசூல்: இந்த வழிமுறைகளில் சாகுபடி செய்தால் ஒரு ஹெக்டேருக்கு 20 முதல் 35 டன் வரை அறுவடை செய்யலாம் என தோட்டக் கலைத் துறை உதவி இயக்குநர் அலுவலக அதிகாரிகள்

தெரிவித்தனர்.

**காளாப்பூரில் தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்க விழா**

சிங்கம்புணரி அருகே காளாப்பூரில் தென்னை உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்கவிழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. சிங்கம்புணரி ஒன்றியத்தில் சுமார் 3000 ஏக்கரில் தென்னை விவசாயம் செய்யப் பட்டுள்ளது. தென்னையில் தேங்காய் உற்பத்தியைக் கூட்டவும், தேங்காய், தேங்காய்பருப்பு, இளநீருக்கு நல்ல விலை கிடைக்கவும், தேங்காயில் இருந்து தேங்காய்பூ, தேங்காய்பால், தேங்காய்ச் சிப்ஸ் போன்றவற்றை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தவும் தமிழ்நாடு வேளாண்மை விற்பனை மற்றும் வணிகத்துறை மூலம் முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. இது குறித்த மாவட்ட அளவிலான கருத்தரங்கு காரைக்குடியில் நடைபெற்றது. இதனையொட்டி சிங்கம்புணரி அருகிலுள்ள காளாப்பூரில் நடைபெற்ற தென்னை உற்பத்தியாளர் நிறுவனத் தொடக்க விழாவிற்கு ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகவேல் தலைமை வகித்தார். வேளாண்மைத் துணை இயக்குநர் சௌந்தர்ராஜன் பேசுகையில், வரும் காலங்களில் அரசு மானியங்கள், சலுகைகளை தனிநபருக்கு வழங்குவதை விட குழுக்களுக்கும், கூட்டமைப்புகளுக்குமே அதிகமாக வழங்கப்பட உள்ளது. எனவே, மாவட்ட தென்னை விவசாயிகள் ஒன்று சேர்ந்து உற்பத்தியாளர் நிறுவனத்தைத் தொடங்கி அரசு சலுகைகளைப் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும், என்றார். விழாவில்சிங்கம்புணரி பகுதியில் உள்ள தென்னை விவசாயிகள் திரளாகக் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் ரத்தினகாந்தி செய்திருந்தார்.

**காப்பீடு திட்ட இழப்பீட்டில் பிடித்தம் செய்த தொகையை விவசாயிகளுக்கு வழங்க கோரிக்கை**

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு காப்பீடு திட்டத்தில் வழங்கப்படும் இழப்பீட்டில், பிடித்தம் செய்துள்ள கமிஷன் தொகையை அதிகாரிகள் திரும்ப வழங்கவேண்டும் என, விவசாயிகள் சங்க

மாநாட்டில் வலியுறுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு அனைத்து விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட அமைப்பு மாநாடு, சிவகங்கையில் மாரிமுத்து தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. மாநிலப் பொதுச் செயலர் எல்.ஆதிமூலம் மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசினார். இதில், காவிரி, வைகை, குண்டாறு நீர்ப்பாசன விவசாயிகள் கூட்டமைப்பு பொதுச்செயலரும், சிவகங்கை நகராட்சித் தலைவருமான அர்ச்சுணன் கலந்து கொண்டு பேசினார். மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில், அதப்படக்கி தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியில் 400 பவுன் நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட சம்பவம் குறித்து, சிபிசிஐடி விசாரிக்க தமிழக அரசு உத்தரவிட வேண்டும். பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் வழங்கப்படும் இழப்பீட்டு தொகையில், அதிகாரிகள் 5 சதவீத கமிஷன் எடுத்துக்கொண்டு விவசாயிகளுக்கு வழங்குகின்றனர். இந்தத் தொகையை விவசாயிகளுக்கு திருப்பித் தரவேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## <u>கால்நடை வளர்ப்பவர்களுக்கு இன்று கடனுதவி பயிற்சி முகாம்</u>

ராஜபாளையம் கால்நடைப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில், கால்நடை வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு வங்கிக் கடனுதவி பெற இலவசப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெறுகிறது. இந்த மைய அலுவலகத்தில் நடைபெறும் பயிற்சி முகாமில், விருதுநகர் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சுப்பிரமணியம் மற்றும் இதர வங்கி மேலாளர்கள் பங்கேற்கின்றனர். இவர்கள், வங்கிகளில் கால்நடை வளர்ப்போர் கடன் பெறும் முறை, அதற்குத் தேவையான ஆவணங்கள் குறித்து விளக்குகின்றனர். இந்த முகாமில் பங்கேற்க விருப்பமுள்ளவர்கள், 04563-220244 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளவேண்டும் என, பயிற்சி மையத் தலைவர் கதிர்வேல் தெரிவித்துள்ளார்.

## மே 29-இல் வேளாண் குறைகேட்புக் கூட்டம்

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வேளாண் குறைகேட்புக் கூட்டம் மே 29-ஆம் தேதி காலை 11 மணி அளவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் காலை 11 முதல் 11.30 மணி வரை விவசாயிகள் சங்க நிர்வாகிகள் மனு அளிக்கலாம். 11.30 முதல் 12.30 மணி வரை விவசாய சங்கப் பிரதிநிதிகள் வேளாண் பிரச்னைகள் தொடர்பாக தங்களது கருத்துகளைத் தெரிவிக்கலாம். தொடர்ந்து 12.30 முதல் 1.30 மணி வரை அரசு அதிகாரிகள் தங்களது விளக்கங்களைத் தெரிவிப்பார்கள். இக்கூட்டத்தில் விவசாயசங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார்.

## தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு

தொடர் மழையால் கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூர் அருகேயுள்ள கெலவரப்பள்ளி அணை நிரம்பியதையடுத்து, தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளதால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கிருஷ்ணகிரி அணையும் நிரம்பும் நிலையில் உள்ளதால், அந்த அணையிலிருந்தும் ஆற்றில் தண்ணீர் திறந்து விடப்பட வாய்ப்புள்ளதால், கரையோர மக்களுக்கு புதன்கிழமை வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது. கர்நாடக மாநிலம், நந்தி மலை, பெங்களூரு மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதையடுத்து, ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து செவ்வாய்க்கிழமை நொடிக்கு 480 கன அடியாக இருந்த நிலையில், புதன்கிழமை நொடிக்கு 600 கன அடியாக அதிகரித்தது. அணையின் உச்ச நீர்மட்டம் 44.28 அடியாகும். தற்போது அணையின் நீர்மட்டம் 44.24 அடியாக உள்ளது. இதையடுத்து, அணையிலிருந்து நொடிக்கு 600 கன அடி தண்ணீர் திறந்து விடப் படுகிறது. வழக்கமாக, ஒசூர் கெலவரப்பள்ளி அணையில் இருந்து நொடிக்கு 200 முதல் 300 கன அடி வரை தண்ணீர் திறந்துவிடப்படும்.

தற்போது நொடிக்கு 600 கன அடி திறந்து விடப்படுவதால், அணையின் 5 மதகுகள் வழியாக தண்ணீர் ஆர்ப்பரித்துச் செல்கிறது. இதனால் கெலவரப்பள்ளி, பார்த்தகோட்டா, ஆழியாளம், கோபசந்திரம் உள்ளிட்ட பகுதிகளில் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் பெருக்கெடுத்துச் செல்கிறது. பார்த்தகோட்டா உள்ளிட்ட கிராமங்களிலுள்ள தென்பெண்ணை ஆற்றின் தரைப்பாலங்கள் வெள்ள நீரில் மூழ்கியுள்ளன. இதனால், அந்தப் பகுதிகளில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அப்போது, அணையின் பாதுகாப்புக் கருதி அணைக்கு வரும் உபரிநீர் முழுவதும் தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படும். எனவே, பொதுமக்கள் தென்பெண்ணை ஆற்றின் தரைப் பாலங்களைக் கடக்க வேண்டாம். ஆற்றங்கரையோரத்தில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்று வருவாய்த் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர். கிருஷ்ணகிரி அணையும் நிரம்புகிறது: கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ள நிலையில், நீர்மட்டம் புதன்கிழமை 50 அடியை எட்டியது. இதையடுத்து, மாவட்ட நிர்வாகம் சார்பில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் கூறியது: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கெலவரப்பள்ளி, கிருஷ்ணகிரி ஆகிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. கிருஷ்ணகிரி அணையின் உச்ச நீர்மட்டம் 52 அடியில் தற்போது 50 அடிக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது. நீர்வரத்து நொடிக்கு 620 கன அடியாக உள்ளது. அணையிலிருந்து நொடிக்கு 17 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் பட்சத்தில், எப்போது வேண்டுமானாலும் கிருஷ்ணகிரி அணையிலிருந்து தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்படும் வாய்ப்புள்ளது. எனவே, ஆற்றங்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

விடுக்கப்பட்டுள்ளது. மேலும், வெள்ள அபாய எச்சரிக்கை குறித்து தென்பெண்ணை ஆறு பாயும் தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களின் ஆட்சியர்களுக்கு தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 11 ஆயிரம் கன அடியாக அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து புதன்கிழமை காலை நொடிக்கு 11 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிக ரித்து வருகிறது. இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5,268 கன அடியாக இருந்தது, புதன்கி ழமை காலை நொடிக்கு 10,962 கன அடியாக அதிகரித்தது. நீர்வரத்து திடீரென அதிகரித்ததால், அணை நீர்மட்டம் 69.16 அடியாக உயர்ந்தது. ஒரே நாளில் அணையின் நீர்மட்டம் 1.05 அடி உயர்ந்துள்ளது. கடந்த மூன்று நாள்களில் அணையின் நீர்மட்டம் 1.75 அடி உயர்ந்துள்ளது. இந்த நிலையில், புதன்கிழமை காலை அணையின் நீர்மட்டம் 69.16 அடியாக இருந்தது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 31.98 டி.எம்.சி.யாக இருந்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருவதால், காவிரி டெல்டா பாசன விவசாயிகள், மேட்டூர் அணைப் பகு தியைச் சேர்ந்த மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## நடமாடும் ஆய்வுக்கூடத்தில் ரூ. 20-க்கு மண் ஆய்வு

பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ. 20-க்கு நடமாடும் மண் ஆய்வுக்கூடத்தில் மண் மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகிறது. இதுகுறித்து வேளாண் துறை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது பெய்து வரும் மழையைக் கொண்டு கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணின் நீர்ப்பிடிப்பு தன்மை அதிகரித்து, பயிர் செழிப்புடன்

வளர வாய்ப்புள்ளது. மண்ணில் உள்ள கூட்டுப் புழுக்கள் பறவைகள் மூலம் அழிக்கப்படுவதால் பூச்சித்தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது. மேலும், மண் மாதிரி எடுத்து ஆய்வு செய்து சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிருக்கு தேவையான அளவு உரத்தை மட்டும் இட்டு சாகுபடி செலவை குறைக்க வாய்ப்புள்ளது. நடமாடும் மண் ஆய்வுக்கூட வாகனம் மூலம் வியாழக்கிழமை (மே 21) லாடபுரம் (கி), 22 ஆம் தேதி லாடபுரம் (மே), 26 ஆம் தேதி களரம்பட்டி, அம்மாபாளையம், 27 ஆம் தேதி வேலூர், பொம்மனப்பாடி, சத்திரமனை, 28 ஆம் தேதி குரும்பலூர் (தெ), 29 ஆம் தேதி எசனை, கீழக்கரை ஆகிய கிராமங்களுக்கு வேளாண் அலுவலர்கள் சென்று மண் மாதிரிகளை ஆய்வுசெய்ய உள்ளனர்.

விவசாயிகள் தங்களது வயலில் மண் மாதிரிகளை சேகரித்து வந்து கட்டணமாக ரூ. 20 செலுத்தி மண் ஆய்வு செய்து, அதன்படி அளவோடு உரங்கள் இட்டு சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாய உற்பத்தியை அதிகரிக்க அரசு அதிகாரிகள் ஆலோசனை</u>**

ஈரோடு : பருவ காலத்தில் பயிர் நடவு செய்தல் குறித்த ஆலோசனை கூட்டம், ஈரோட்டில் நடந்தது. உலக வெப்பமயமாகுதல் காரணமாக, உலகளவில் அரிசி உற்பத்தி குறைந்து வருகிறது. அரிசி உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், விவசாயத்தை அடிப்படைய ாக கொண்ட நாடுகளுக்கு, நார்வே அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.அதுபோல், இம்முறை ஈரோடு மாவட்டம் காலிங்கராயன் பாசன பகுதிகள், திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா பொன்னனி ஆறு பாசன பகுதிகளில், நெல் சாகுபடியை அதிகரிக்க, நார்வே நாடு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

அதனடிப்படையில், நெல் சாகுபடியை அதிகரிக்க செய்யும் வகையில், ஆலோசனை கூட்டம் நடந்தது. இதில், வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ராஜு, கோவை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர்கள் கீதாலட்சுமி, லட்சுமணன் மற்றும் காலிங்கராயன், பொன்னனி ஆற்று பகுதி விவசாயிகள் பங்கேற்றனர். இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: "கிளைமா அடாப்ட்' என்ற பெயரில் சாகுபடி தொழில்நுட்ப முறையில் மாற்றம் குறித் து, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் அளிக்கப்படும். வழக்கமாக ஜூன், ஜூலை மாதங்களில் தான், நிலக்கடலையை விவசாயிகள் பயிரிடுவர். ஆனால், இந்தாண்டு, மே மாதம், தேவையான அளவு மழை பெய்துள்ள து. இதனை பயன்படுத்தி நிலக்கடலையை பயிரிட வேண்டும்.ஆனால், விவசாயிகள் நிலக்கடலையை விதைக்கவில்லை. கடந்தாண்டு அக்., மூன்றாவது வாரத்தில் கனமழை பெய்தது. அதற்கு முன்னதாகவே, நெல்லை அறுவடை செய்யும் வகையில், குறுகிய கால பயிர்களை நடவு செய்ய வேண்டும்.மூன்று விதமான வானிலை முன் அறிவிப்பு அளிக்கப்படுகிறது. இதனை தெரிந்து வைத்து கொண்டு, அதிகம் நஷ்டம் ஏற்படாத பயிர்களை, நடவு செய்ய வேண்டும். எஸ்.ஆர்.ஐ., (திருந்திய நெல் சாகுபடி) மூலம், 25 முதல், 30 ஏக்கரை ஒருங்கிணைத்து திட்டம் செயல்படுத்தப்படுகிறது. எஸ்.ஆர்.ஐ., முறையில், காலி ங்கராயன் பாசன பகுதியில், 600, பொன்னனி ஆற்று பகுதியில், 200 ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நான்கு ஆண்டில், 2,100 ஏக்கர் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில், 22 முதல், 25 சதவீதம் வரை விளைச்சல் அதிகரித்துள்ளது.நெல் மட்டுமின்றி தோட்டக்கலை பயிர்கள், மலர் சாகுபடி, மஞ்சள் சாகுபடியும், இத்திட்டத்தில் அபிவிருத்தி செய்யப்படும். இதற்காக, கிராமங்கள் தோறும் கிராம அறிவு மையம்

துவங்கப்படுகிறது. இம்மாவட்டத்தில் கருங்கல்பாளையம், கொம்பனை புதூர் ஆகிய பகுதிகளில் மையம் துவங்கி செயல்படுகிறது.முன்னர் நெல்லுக்கு ஆடி, தை பட்டம் என்று பெயரிடப்பட்டது. ஆனால் தற்போது நிலை மை முற்றிலும் மாறி உள்ளது. கடந்தாண்டு ஜூன், ஜூலையில் துவரை பயிரிடப்பட்டு, செப்., அறுவடை செய்யப்பட்டது. அதிக மகசூல் கிடைத்தது.பருவ கால மாற்றத்தை கண்டறிந்து, அதற்கு தகுந்தவாறு விவசாய விளை பொருட்களை அதிகரிக்க செய்வது குறித்து, விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படும், என்றனர்.

## போதிய உரம் கையிருப்பு; இணை இயக்குனர் தகவல்

ஈரோடு : நடப்பு பருவத்துக்கு விவசாயத்துக்கு தேவையான உரம், கையிருப்பில் உள்ளதாக, ஈரோடு வேளாண் இணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்தார். மேலும், அவர் கூறியதாவது: கோடையில், ஆங்காங்கே நல்ல மழை பெய்து வருகிறது. காலிங்கராயன் பாசன பகுதிக்கு, தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இருப்பினும், கோடை மழையால் விவசாயிகள், எண்ணெய் வித்து பயிர்களை, அறுவடை செய்துவிட்டு, மீண்டும் விவசாய பணியை துவக்கி உள்ளனர்.ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து தொடக்க கூட்டுறவு வேளாண் மையங்களிலும், போதிய உரம் கையிருப்பில் உள்ளது. தனியார் கடைகளிலும், உரம் இருப்பதால் வைக்கப்பட்டுள்ளது.தற்போது, ஈரோடு மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு மையத்தில், யூரியா - 1,740 டன், பொட்டாஷ் - 940 டன், டி.ஏ.பி., - 660 டன் கையிருப்பில் உள்ளது. தனியார் கடைகளில் யூரியா - 755 டன், பொட்டாஷ் - 200 டன், டி.ஏ.பி., - 400 டன்னும் உள்ளது.மற்ற மாவட்டத்தில் உள்ளதை விட, ஈரோடு மாவட்டத்தில் அதிகளவில் உரம் இருப்பில் உள்ளது. தவிர, விரைவில் கூடுதல் உரம் வர உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**திராட்சையில் 'மிரட்டும்' காட்டெருமை; குன்னூர் பழக்கண்காட்சியில் புதுமை**

குன்னூர் : குன்னூர் சிம்ஸ்பூங்காவில், வரும் 23, 24ம் தேதிகளில் நடக்கும் பழக்கண்காட்சியில், வெளிநாட்டு பழங்கள் உட்பட அரிய வகை பழங்களை காட்சிக்கு வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் குன்னூர் சிம்ஸ்பூங்காவில் வரும், 23, 24ம் தேதிகளில், 57வது ஆண்டு பழக்கண்காட்சி நடக்கிறது. இதற்காக 'நீலகிரி கார்' என அழைக்கப்படும் நீலகிரி காட்டெருமை, அழிவின் பிடியில் உள்ள நீலகிரி லங்கூர் ஆகியவற்றின் உருவங்களை திராட்சை பழங்களால், வடிமைக்கும் பணிகள் நடக்கின்றன.திருச்சி, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி தோட்டக்கலை துறைகளின் 'ஸ்டால்கள்' உட்பட பல்வேறு அமைப்புகளின், 12 ஸ்டால்கள் அமைக்கும் பணிகள் துவங்கியுள்ளன. ஆஸ்திரேலியா, ஐரோப்பிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிளாக்பெரி, புளூபெரி, கிரேன்பெரி, கிவி ஆகியவையும், நீலகிரியின் பெருமையை பறைச்சாற்றும் விக்கி, ஊசிகலா, தவிட்டுபழம், குரங்கு பழம், முட்டை பழம், வெள்ளை சப்போட்டா, ஐவிரலி ஆகிய பழங்களும், கண்காட்சியில் வைக்கப்பட உள்ளன. 23ம் தேதி படுகர் வரவேற்பு நடனம், நாட்டுப்புற தெம்மாங்கு, தென்னிசை பாடல்கள், மேஜிக் ஷோ, கோத்தர்கள் நடனம், இன்னிசை நிகழ்ச்சி ஆகியவையும், 24ம் தேதி தோடர் நடனம், குரும்பர் நடனம், இன்னிசை கச்சேரி, பார்வையற்றவர்களின் கலாசார நிகழ்ச்சி ஆகியவையும் நடக்கிறது.சிறந்த பழத்தோட்டம் மற்றும் குளிர் பிரதேச, மித வெப்ப மண்டல, வெப்ப பிராந்திய பழங்களை வளர்க்கும் விவசாயிகளுக்கு பரிசுகளும், சுழற்கோப்பைகளும் வழங்கப்பட உள்ளன.

## ஒட்டன்சத்திரத்தில் முருங்கைக்காய் கிலோ ரூ.55

ஒட்டன்சத்திரம்: வரத்து வெகுவாக குறைந்ததால் ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் விலை அதிகரித்து கிலோ ரூ.55 ஐ தொட்டது. கள்ளிமந்தையம், மார்க்கம்பட்டி, மூலனூர், தாராபுரம் பகுதிகள் மற்றும் ஒட்டன்சத்திரத்தைச் சுற்றி உள்ள ஒருசில கிராமப்பகுதிகளில் செடி முருங்கை அதிகமாக பயிரிடப்படுகிறது. சில மாதங்களாக வரத்து அதிகமாக இருந்ததால், நீண்ட நாள்களாக ஒரு கிலோ முருங்கைக்காய் ரூ.20 ஐ தாண்டாமல் இருந்தது. பின், தொடர்ச்சியாக மழை பெய்ததால், மழையில் முருங்கை பூக்கள் <<உதிர்ந்து மகசூல் பாதித்தது. இதன்காரணமாக ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் முருங்கைக்காய் வரத்து பாதியாக குறைந்து விட்டது. கடந்த வெள்ளியன்று ஒரு கிலோ முருங்கைக்காய் விலை ரூ.37 ஆக இருந்தது. ஞாயிறன்று ரூ.10 வரை அதிகரித்து ரூ.47க்கு விற்றது. திங்களன்று ரூ.45 ஆக குறைந்தது. நேற்று முருங்கையை வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு வாங்க ஆரம்பித்ததால், மீண்டும் கிலோவுக்கு ரூ.10 அதிகரித்து, ரூ.55க்கு விற்றது.

## காய்கறி மகத்துவ மையத்தில் ஆணையர் ராஜேஷ் லக்கானி ஆய்வு

ரெட்டியார்சத்திரம்: திண்டுக்கல் அருகே காய்கறி மகத்துவ மையத்தில் விவசாயத் துறை கமிஷனர் ராஜேஷ் லக்கானி ஆய்வு செய்தார். திண்டுக்கல்-பழநி ரோட்டில், ரெட்டியார்சத்திரத்தில் தோட்டக்கலைத் துறை சார்பில் ரூ.44 லட்சம் மதிப்பீட்டில், இஸ்ரேல் தொழில்நுட்பத்தில் செயல்படும் தோட்டக்கலை காய்கறி மகத்துவ மையம் உள்ளது. இங்கு வரும் இஸ்ரேல் விஞ்ஞானிகள் அவ்வப்போது பார்வையிட்டு, ஆலோசனைகள் வழங்குகின்றனர். கோடை விழாவிற்காக வந்த

வேளாண்மை துறை ஆணையாளர் ராஜேஷ்லக்கானி, முதன்முறையாக நேற்றுமுன்தினம் மகத்துவ மையத்திற்கு வந்தார். அதிகாரிகளின் "பொக்கே' வரவேற்பை ஏற்ற அவர், ஒப்பந்ததாரர் அளித்த சால்வையை ஏற்க மறுத்து விட்டார். அதிகாரிகள், கம்ப்யூட்டர் பிரின்டட் கோப்புகளை அவரிடம் வழங்கினர். ""கோப்புகள் பார்க்க நான் இங்கு வரவில்லை. தகவலை மட்டும் தெளிவாக கூறுங்கள்," என்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர் சீனிவாசன், மைய மேலாளர் பெருமாள்சாமி ஆகியோர் உயர் தொழில் நுட்ப முறை காய்கறி உற்பத்தி குறித்து விளக்கினர். மூன்று ஆண்டுகளாக தக்காளி, வெண்டை, மிளகாய் உற்பத்தி செய்து விற்பனை செய்ததாக தெரிவிக்கப்பட்டது. புள்ளி விபரங்களை ஆய்வு செய்த ஆணையாளர், "வரவு செலவு குறித்து கேட்டறிந்தார். ""மூன்றாண்டு வரவு ஏழு லட்சம், ஆனால் 24 லட்சம் செலவிட்டுள்ளீர்கள். இது விவசாயிக்கு எவ்வாறு ஏற்புடையதாக இருக்கும். திட்டம் துவங்கி மூன்றாண்டுகளாகியும் "பாலிஹவுஸ்' முறை இன்னமும் செயல்பாட்டிற்கு வரவில்லை. கட்டடங்களுக்கே அதிகம் செலவிடப்பட்டுள்ளது," என கேள்வி எழுப்பினார். அதிகாரிகள், "இது துவக்க நிலை என்பதால் இச்செலவு ஏற்பட்டுள்ளது' எனக்கூறி ஒருவழியாக சமாளித்தனர்.

## <u>தொடர் மழையால் பாதிப்பு உச்சத்தில் காய்கறி விலை</u>

பழநி: தொடர் மழையால் காய்கறி விளைச்சல் பாதித்து பழநி மார்க்கெட், உழவர்சந்தையில் விலை அதிகரித்துள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, கணக்கன்பட்டி, கோம்பைபட்டி, கரடிகூட்டம், தாமரைக்குளம், கரிக்காரன்புதூர் பகுதிகளில் சொட்டு நீர்ப்பாசனம், கிணற்றுப் பாசனம் மூலம் தக்காளி கத்தரிக்காய், முட்டைக் கோஸ் சாகுபடி செய்துள்ளனர். கடந்த சில நாட்களாக தொடர் மழை, காட்டாற்று வெள்ளம் போன்ற காரணங்களால் தக்காளி விளைச்சல் பெரிதும் பாதித்தது. எனவே மார்க்கெட்டிற்கு தக்காளி வரத்து குறைந்தது. கடந்தவாரம் கிலோ ரூ.14

முதல் ரூ.18 வரை விற்ற தக்காளி, நேற்று கிலோ ரூ.22 முதல் ரூ.30 வரை விற்றது. வெங்காயமும் அழுகியுள்ளதால் தரமான பல்லாரி வெங்காயம் கிலோ ரூ.26 முதல் 30 வரை விற்கப்படுகிறது. காய்கறி விலை (கிலோவுக்கு): கத்தரிக்காய் ரூ. 35, முட்டைக்கோஸ்-10, கேரட் ரூ.40, வெண்டைக்காய் ரூ.36, சின்னவெங்காயம் ரூ.26, உருளைக்கிழங்கு ரூ. 26, நூக்கல்-ரூ. 28, மாங்காய் ரூ.15, பச்சைமிளகாய் ரூ. 24, வெண்டை ரூ.24, முருங்கைபீன்ஸ் ரூ.50. உழவர்சந்தை அதிகாரி ஒருவர் கூறுகை யில்,"வழக்கமாக தினமும் 17 டன் காய்கறிகள் சந்தைக்கு வரும். சமீபநாட்களாக தொடர்ந்து மழை பெய்ததால், விளைச்சல் பாதித்தது. இதனால் 13டன் தான் வருகிறது. காய்கறிகளுக்கு கிராக்க ஏற்பட்டதால், தக்காளி, கத்தரி, வெண்டை போன்றவை கடந்த வாரத்தை விட கிலோவுக்கு ரூ.3 முதல் 5 வரை உயர்ந்துள்ளது," என்றார்.

## கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் ரூ.90 லட்சத்துக்கு கொள்முதல்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சியில் நடந்த பருத்தி சந்தையில் ரூ.90 லட்சத்துக்கு பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டது. கள்ளக்குறிச்சி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று பருத்தி வார சந்தை நடந்தது. இதனையொட்டி பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 605 விவசாயிகள் 7,000 பஞ்சு மூட்டைகளை விற்பனைக்காக கொண்டு வந்தனர். பல மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் பஞ்சு மூட்டைகளுக்கு விலை நிர்ணயம் செய்தனர். இதன்படி எல்.ஆர்.ஏ., பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.4,366, குறைந்தபட்சமாக ரூ.3,900க்கு விலை போனது. இதேபோல் சுவின் பஞ்சு ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சமாக ரூ.4,869, குறைந்தபட்சமாக ரூ.4,700க்கு விலை போனது. கள்ளக்குறிச்சி பருத்தி சந்தையில் விவசாயிகள் கொண்டு வந்த 7,000 பஞ்சு மூட்டைகள் ரூ.90 லட்சத்துக்கு கொள்முதல் செய்யப்பட்டது.

## நாய்களை கட்டுப்படுத்த கால்நடைத்துறை யோசனை

கரூர்; கரூர் நகரம் முழுவதும் தெரு நாய்கள் அதிகம் சுற்றித்திரிவதால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். நாய் தொல்லையை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து கால்நடை பராமரித்துறை அதிகாரிகள் வெளியிட்ட அறிக்கை: கால்நடை வளர்ப்போர், பட்டியை இருப்பிடத்திற்கு அருகில் அமைத்து, நேரடி கண்காணிப்பில் பாதுகாக்க வேண்டும். நாய்களை வளர்க்கும் பொதுமக்கள், அதற்கு சரியான முறையில் உணவளித்து குறிப்பிட்ட காலத்தில், வெறிநோய் தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும். நாய்களை பொது இடத்திலும், வெளி இடங்களிலும் சுற்றித்திரிய விடாமல் பாதுகாக்க வேண்டும். அப்போது தான் அப்பாவி மக்கள் பாதிக்க மாட்டார்கள். நாய்களுக்கு முறையான கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, நாய்கள் பெருக்கத்தை கட்டுப்படுத்த வேண்டும், என்று தெரிவித்துள்ளனர்.

## விவசாயிகள் கவனத்திற்கு

ராமநாதபுரம்: ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக ஊராட்சி மன்ற கூட்டரங்கில் நாளை (மே22) காலை 11.30 மணிக்கு மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம்,கலெக்டர் நந்தகுமார் தலைமையில் நடக்கிறது. இதில் விவசாய சங்க பிரதிநிதிகள் குறைகளை தெரிவித்து பயனடையலாம். மேலும், மனுக்களை பொது சேவை மையத்தில் பதிவு செய்து, ஒப்புதல் ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

## கை கொடுத்த கோடைமழையால் பயிர்பரப்பு 65 எக்டேர் அதிகரிப்பு

விருதுநகர்: மாவட்டத்தில் கோடைமழை கை கொடுத்ததால் ஏப்ரலில் கடந்தாண்டைவிட 65 எக்டேர் கூடுதலாக விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். மாவட்டத்தில் ஜனவரி முதல் மே வரை பெய்ய வேண்டிய சராசரி மழையளவு 248.86 மி.மீ., கோடை மழையால்

இந்தாண்டு இதுவரை 210.20 மி.மீ., பதிவாகி உள்ளது. மே மாத சராசரி மழையளவு 59.70 மி.மீ., இந்தாண்டு இதுவரை 114.63 மி.மீ., மழை பெய்துள்ளது. கடந்தாண்டு ஏப்ரலில் ஸ்ரீவி.,வத்திராயிருப்பு, ராஜபாளையம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் 4 எக்டேரில் நெல், 14 எக்டேரில் சிறுதானியம், 25 எக்டேரில் பயறு வகைகள், 37 எக்டேரில் எண்ணெய் வித்துக்கள், 89 எக்டேரில் பருத்தி, ஒரு எக்டேரில் கரும்பு என 170 எக்டேர் பயிரிடப்பட்டிருந்தது. இந்தாண்டு ஏப்ரலில் 32 எக்டேரில் நெல், 8 எக்டேரில் பயிறு வகைகள், 78 எக்டேரில் எண்ணெய் வித்துக்கள், 105 எக்டேரில் பருத்தி, 12 எக்டேரில் கரும்பு என 235 எக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. கோடை மழை காரணமாக கடந்தாண்டைவிட 65 எக்டேரில் விவசாயிகள் கூடுதலாக பயிரிட்டுள்ளனர். வேளாண் அதிகாரி ஒருவர் கூறுகை யில்,"ஏப்ரல் சராசரி மழையளவு 74.10 மி.மீ. ஆனால் இந்தாண்டு ஏப்ரலில் 88.94 மி.மீ.,மழை பெய்து குளங்களுக்கு நீர்வரத்து அதிகரித்து விவசாய பணிகளுக்கு உதவி உள்ளது. இதனால் கூடுதலாக 65 எக்டேர் பரியிடப்பட்டுள்ளது,"என்றார்.

**தினகரன்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்</u>**

திருவள்ளூர், : திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும் 22ம்தேதி காலை 11 மணிக்கு திருவள்ளூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கலெக்டர் வீரராகவராவ் தலைமை வகிக்கிறார். வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத்துறை, பொதுப்பணித்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடை

பராமரிப்புத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வுகாண உள்ளனர். எனவே, விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

**<u>சங்கராபுரம் பகுதியில் கேழ்வரகு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்</u>**

சங்கராபுரம், : அதிக விளை நிலங்கள் கொண்ட பகுதியாக சங்கராபுரம் உள்ளது. இப்பகுதியில் மாற்றுப்பயிராக கேழ்வரகை விவசாயிகள் பயிரிட்டு வருகின்றனர். இதற்கு அதிக தண்ணீர் தேவையில்லை என்பதாலும், காய்ச்சல் காலங்களில் விளையக்கூடிய பயிராகஇருப்பதாலும் இதனை விவசாயிகள் அதிக அளவில் பயிரிட்டு வருகின்றனர்.ஒரு ஏக்கருக்கு 5 கிலோ விதை கேழ்வரகு போதுமானதாகும். வாரத்திற்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சினால் போதும். அறுவடை செய்வதற்குள் மூன்று முறை களை எடுக்க வேண்டும். இது நான்குமாத கால பயிராகும். நூறு கிலோவின் விலை ரூ.3000 முதல் ரூ.5000 வரை விலை போவதால், இதனை அதிக அளவில் விவசாயிகள் பயிரிடுகின்றனர்.மேலும் இது மருத்துவ குணம் கொண்டதால் இது எப்போதும் விலை குறையாமல் விற்கப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயிகள் அதிக அளவில் பயிரிடுகின்றனர்.

**<u>கோடை மழையால் விவசாய பணியை நாடி செல்லும் 100 நாள் வேலை திட்ட பயனாளிகள்</u>**

பொள்ளாச்சி, : கோடை மழையால், 100 நாள் வேலை திட்ட பயனாளிகள் விவசாய பணியை நாடி செல்கின்றனர். பொள்ளாச்சி தாலுகாவில் வடக்கு, தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் ஊரக வேலை உறுதித்திட்ட பணி நடைபெற்று வருகிறது. ஒன்றியத்திற்குட்பட்ட

ஊராட்சிகளில் கடந்த 2009ம் ஆண்டில் 200க்கும் மேற்பட்ட பயனாளிகள் வேலைபார்த்து வந்தனர். வருடத்தில் 100 நாட்கள் வேலை என்று நிர்ணயிக்கப்பட்டு பணிகள் நடைபெற்றது. இதில், முதற்கட்டமாக ரூ.80 கூலியாக இருந்தது. படிப்படியாக அதிகரித்து தற்போது ரூ.183ஆக உள்ளது. இருப்பினும் பயனாளிகள் வேலைக்கு தகுந்தாற்போல் கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. நடப்பாண்டில், ஊராக வேலை உறுதித்திட்ட பணியில் ஈடுபட விருப்பம் உள்ள பயனாளிகளுக்கு அதிகாரிகள் அழைப்பு விடுத்தனர். இதைதொடர்ந்து கடந்த ஏப்ரல் மாதம் ஊராட்சிகளில் பயனாளிகள் எண்ணிக்கை அதிகளவில் காணப்பட்டன. தெற்கு, ஆனைமலை, கிணத்துக்கடவு, வடக்கு ஒன்றியங்களில் 70 முதல் 80 சதவீத பயனாளிகள் ஊரக பணியில் ஈடுபட்டனர். அதிகபடியாக ஆனைமலை ஊராட்சியில் 80 சதவீத பயனாளிகள் தொடர்ந்து வந்தனர். இந்நிலையில் தற்போது சுற்றுவட்டார கிராமங்களில் கடந்த சிலவாரங்களாக தொடர்ந்து கோடை மழைப்பொழிவு இருந்ததால், ஊராட்சியில் உள்ள வேலையுறுதித்திட்ட பயனாளிகள் பலர் விவசாய வேலையை நாடி செல்ல துவங்கியுள்ளனர். இதில் விவசாய நிலங்கள் அதிகம் உள்ள வடக்கு ஒன்றிய பகுதிகளில், விவசாயிகள் தங்கள் விளை நிலங்களில் மானாவாரி பயிர் விதைப்பில் தீவிரம் காட்டியுள்ளனர். இதை தொடர்ந்து ஊரக வேலை உறுதி திட்டத்தில் பணிபுரியும் பயனாளிகள் பலர், அதிக கூலியை எதிர்நோக்கி விவசாய தொழிலுக்கு சென்றுள்ளனர். இதனால், வடக்கு ஒன்றியத்திற்குபட்ட ஊராட்சிகளில் கடந்த சில வாரங்களாக ஊரக வேலையுறுதித்திட்ட பயனாளிகள் எண்ணிக்கை நாளுக்கு, நாள் குறைய துவங்கியது. கடந்த ஏப்ரல் மாதம் 70 சதவீத பயனாளிகள் வந்து கொண்டிருந்த, வடக்கு ஒன்றியத்தில், தற்போது 50 சதவீத பயனாளிகளே ஊரக வேலையுறுதித்திட்ட வேலைக்கு வருகின்றனர். மற்றவர்கள் விவசாய வேலையை நாடி சென்றுள்ளனர் என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

<u>**தென்னந்தோப்பில் கர்நாடக அதிகாரிகள் ஆய்வு**</u>

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த தப்பட்டைகிழவன் புதூரில் உள்ள ஒரு விவசாயிக்கு சொந்தமான தென்னந்தோப்பில், கர்நாடக அரசின் வரித்துறை அதிகாரி சம்பு தயாளமீனா, தோட்டக்கலைத் துறையை சேர்ந்த ராஜ்பதிசாமி ஆகியோர் நேற்று, ஆய்வு மேற்கொண்டனர். அங்குள்ள தென்னைகளில் நிரா எனப்படும் பதநீர் இறக்கி அதனை எதற்கெல்லாம் பயன்படுத்தப்படுகிறது என்பது குறித்தும், அதன் மூலம் விவசாயிகளுக்கு என்ன லாபம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு கேட்டறிந்தனர். அப்போது விவசாயிகள் கூறுகையில், ‘தென்னையிலிருந்து இறக்கப்படும் பதநீரை கொண்டு அச்சுவெல்லம், தேன், கருப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயாரிக்கப் படுகின்றன. இதன் மூலம் ஓரளவு வருவாய் உண்டாவதாகவும். இந்த தொழில் மூலம் தென்னை தொழிலாளர்கள் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாகவும்’ விளக்கம் அளித்தனர். இந்த ஆய்வின் போது கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ஹேமா சந்திரன், தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர் பரமசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர். பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை அடுத்த தப்பட்டைகிழவன் புதூரில் உள்ள ஒரு விவசாயிக்கு சொந்தமான தென்னந்தோப்பில், கர்நாடக அரசின் வரித்துறை அதிகாரி சம்பு தயாளமீனா, தோட்டக்கலைத்துறையை சேர்ந்த ராஜ்பதிசாமி ஆகியோர் நேற்று, ஆய்வு மேற்கொண்டனர். அங்குள்ள தென்னைகளில் நிரா எனப்படும் பதநீர் இறக்கி அதனை எதற்கெல்லாம் பயன்படுத்தப் படுகிறது என்பது குறித்தும், அதன் மூலம் விவசாயிகளுக்கு என்ன லாபம் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு கேட்டறிந்தனர். அப்போது விவசாயிகள் கூறுகையில், ‘தென்னையிலிருந்து இறக்கப்படும் பதநீரை கொண்டு அச்சுவெல்லம், தேன், கருப்பட்டி உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதன் மூலம் ஓரளவு வருவாய்

உண்டாவதாகவும். இந்த தொழில் மூலம் தென்னை தொழிலாளர்கள் பலருக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதாகவும்' விளக்கம் அளித்தனர். இந்த ஆய்வின் போது கொச்சின் தென்னை வளர்ச்சி வாரிய துணை இயக்குனர் ஹேமாசந்திரன், தென்னை வளர்ச்சி வாரிய அலுவலர் பரமசிவம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோடை உழவு, மண் ஆய்வு செய்து உரமிட்டு அதிக மகசூல் பெறலாம் விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

பெரம்பலூர்: விவசாயிகள் கோடை மழையை பயன்படுத்தி கோடை உழவு மற்றும் மண் ஆய்வு செய்து உரமிட்டால் அதிக மகசூல் பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் இணை இயக்குனர் யோசனை தெரிவித்துள்ளார். பெரம்பலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் (பொ) அய்யாசாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு : பெரம்பலூர் மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து வருகிறது. கோடை மழையை பயன்படுத்தி வயலை உழுதால் மண்ணிற்கு சிறந்த பயனைத்தரும். இதன் மூலம் மண்ணின் நீர்ப்பிடிப்புத் தன்மை அதிகரித்து மண்ணில் நீர் உறிஞ்சப்படுகிறது. மேலும், உழவு செய்யும்பொழுது மேல்மண், கீழாகவும், கீழே உள்ள மண்மேலாக வரும்பொழுது சாகுபடி செய்யும் பயிர் செழிப்புடன் வளர வாய்ப்புள்ளது. மண்ணில் உள்ள கூட்டுப்புழுக்கள் மேற்பரப்பிற்கு வரும்பொழுது பறவைகள் மூலம் அழிக்கப்படுவதன் மூலம் பூச்சித்தாக்குதல் கட்டுப்படுத்தப்படுகிறது. கோடை உழவுக்குப்பிறகு பயிர் சாகுபடி மேற்கொள்வதற்கு முன்பாக மண் மாதிரி எடுத்து ஆய்வுசெய்து சாகுபடி மேற்கொள்வதன் மூலம் பயிருக்குத் தேவையான அளவு உரத்தை மட்டும் இட்டு சாகுபடி செலவை குறைக்க வாய்ப்புள்ளது. இதற்காக நாளை (21ம் தேதி) லாடபுரம்(கி) மற்றும் லாடபுரம்(மே), 22ம்தேதி களரம்பட்டி மற்றும் அம்மாபாளையம், 26ம்தேதி வேலூர், 27ம்தேதி பொம்மனப்பாடி மற்றும் சத்திரமனை, 28ம் தேதி குரும்பலூர்(தெ), 29ம் தேதி எசனை மற்றும் கீழக்கரை ஆகிய பகுதிகளுக்கு நடமாடும் மண்பரிசோதனைக்கூட வாகனம் மூலம்

அதிகாரிகள் மண் மாதிரிகள் ஆய்வு மேற்கொள்ள வருகை தர உள்ளனர். அப்போது அனைத்து விவசாயிகளும் தங்களது வயலில் மண் மாதிரிகளை சேகரித்துவந்து கட்டணமாக ரூ. 20ஐ செலுத்தி மண் ஆய்வு செய்து, அதன்படி உரங்கள் அளவோடு இட்டு சாகுபடி மேற்கொண்டு அதிக லாபம் பெற்று பயனடைய வேண்டும் என மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

## கறம்பக்குடி பகுதியில் உள்ள வேளாண் நிலங்களில் ஆழ்துளை கிணறு

கறம்பக்குடி: புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்கோட்டையில் பெரியார் அம்பேத்கர் மக்கள் கழகம் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வள்ளுவர் திடலில் நடைபெற்ற இப்பொதுக்கூட்டத்துக்கு தங்க தனபால் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் சோம சண்முகம், சுதாகர், முருகேசன் ஞானப்பிரகாசம், ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில அமைப்பாளர் தமிழினியன், துரை பெரியசாமி, கரிகாலன் உள்ளிட்ட நிர்வாகிகள் சிறப்புறையாற்றினர்.தீர்மானங்கள்: புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசுக்கு சொந்தமான சமூகக் காடுகள், மேய்ச்சல் தரிசு நிலங்களை கூட்டுப் பண்ணை திட்டத்தின் கீழ் கொண்டுவர வேண்டும். வம்பன், குடுமியான்மலை, வெள்ளாளவிடுதி பகுதிகளில் உள்ள வேளாண் பண்ணைகளில் பாரம்பரிய விதைகளை உற்பத்தி செய்ய வேண்டும். கடுக்காகாடு, மாங்கோட்டை, பிலாவிடுதி, மைலன்கோன்பட்டி, பந்துவாக்கோட்டை போன்ற கிராமங்களில் வேளாண் பயன்பாட்டுக்காக ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். இதே போல், கறம்பக்குடி வட்டாரத்தில் உள்ள கோயில் நிலங்களிலும் ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்க வேண்டும். உழைக்கும் மக்களை ஒரே குடையின் கீழ் ஒன்றிணைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முடிவில் பந்துவக்கோட்டை சக்தி நன்றி கூறினார்.

## உத்தமதாணியில் ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு பயிற்சி

கும்பகோணம்: உத்தமதாணி ஊராட்சியில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை அட்மா திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு மற்றும் பூச்சி கட்டுப்பாடு பயிற்சி நடந்தது. வேளாண்மை அலுவலர் செல்வமணி வரவேற்றார். ஊராட்சி தலைவர் ஜெயபால், அட்மா திட்ட ஆலோசனைக்குழு தலைவர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தனர். சாக்கோட்டை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் தலைமை வகித்தார். வேளாண்மை துணை இயக்குநர் சீனிவாசன், கும்பகோணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் லட்சுமி காந்தன் ஆகியோர் ஒருங்கிணைந்த எலி கட்டுப்பாடு முறை பற்றி எடுத்துரைத்தனர். ஒருங்கிணைந்த பூச்சி கட்டுப்பாடு மற்றும் நெல் பயிரில் காணப்படும் பூச்சிகள் கட்டுப்படுத்தும் முறை குறித்து தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் மதிராஜன் எடுத்துரைத் தார். பயிற்சி முடிவில் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. அட்மா தொழில்நுட்ப மேலாளர் சக்கரவர்த்தி நன்றி கூறினார். ஏற்பாடுகளை தொழில்நுட்ப வல்லுநர்கள் இளமதி, கார்த்தி செய்திருந்தனர்.

## சித்திரை பட்ட உளுந்தை மழையிலிருந்து காக்கும் வழிமுறை வேளாண்மை அதிகாரி விளக்கம்

திருக்காட்டுப்பள்ளி: தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டாரத்தில் திருக்காட்டுப்பள்ளி, ஒன்பத்துவேலி, விஷ்ணம்பேட்டை, தீட்சசமுத்திரம், கூத்தூர், அலமேலுபுரம், அகரப்பேட்டை, திருச்சென்னம்பூண்டி, பழமார்நேரி உள்ளிட்ட கிராமங்களில் சித்திரை பட்ட இறவை உளுந்து சாகுபடி செய்யப்பட்டு பூக்கும் பருவம் வரை உள்ளது. இந்நிலையில் தற்போது பெய்த மழையால் தேங்கியுள்ள நீரை முழுவதுமாக வடிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 20 லிட்டர்

தண்ணீரில் முதல்நாளே ஊறவைத்து மறுநாள் வடிகட்டி தெளிவை எடுத்து இத்துடன் 180 லிட்டர் தண்ணீர் சேர்த்து கைத்தெளிப்பான் மூலம் மாலையில் பூக்கும் தருணத்தில் ஒருமுறை, 15 நாட்கள் கழித்து ஒருமுறை தெளிக்க வேண்டும். அல்லது யூரியா பாஸ்பேட் 17: 44: 0 உரத்தை ஏக்கருக்கு ஒரு கிலோ வீதம் 100 லிட்டர் தண்ணீரில் கரைத்து உளுந்து பயிர் நன்றாக நனையுமாறு தெளிக்க வேண்டும். இதனால் பூக்கள் உதிர்வது குறைந்து காய் பிடிக்கும் திறன் அதிகரித்து மகசூல் கூடும். இவ்வாறு பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரபாகர் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கால்நடை வளர்ப்பு தொழிலுக்கு புத்துயிர் ஊட்டிய கோடை மழை</u>**



நலிவடைந்த நிலையில் இருந்த கால்நடை வளர்ப்பு தொழிலுக்கு, தற்போது பெய்து வருகிற கோடைமழை புத்துயிர் ஊட்டியுள்ளது.

<u>கால்நடை வளர்ப்பு தொழில்</u>

திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயத்துக்கு அடுத்தப்படியாக முக்கிய தொழிலாக கால்நடை வளர்ப்பு தொழில் விளங்குகிறது. கடந்த சில ஆண்டுகளாக நிலவிய வறட்சி காரணமாக, கால்நடை வளர்ப்பு தொழில் நலிவடைந்தது. குறிப்பாக ஏப்ரல், மே மாதம் வந்து விட்டாலே கால்நடை களுக்கு கடுமையான தீவன தட்டுப்பாடு ஏற்படும். இதற்கு பயந்து போய், கால்நடைகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்து விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இதனால் கால்நடை வளர்ப்பு தொழிலில் பலர்

ஆர்வம் காட்டாமல் இருந்தனர். அதன்படி இந்த ஆண்டு கோடைகாலம் எப்படி இருக்குமோ? என்ற கவலை விவசாயிகளை வாட்டி வதைத்தது.

ஆனால் வருண பகவான் காட்டிய கருணையால், அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் இருந்து மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. தொடர் மழை எதிரொலியாக, திரும்பிய திசைகளில் எல்லாம் பச்சைப்பசேல் என்று காட்சி அளிக்கிறது. விவசாய பயிர்கள் செழித்து வளர்கிறது.

<u>விவசாயிகள் ஆர்வம்</u>

இதுமட்டுமின்றி தரிசு நிலங்களில் காய்ந்து கிடந்த புற்கள், மீண்டும் உயிர் பெற்று பச்சைக்கம்பளம் விரித்தாற்போல பசுமையாக காட்சி அளிக்கின்றன. செடி, கொடிகளும் நிலங்களை ஆக்கிரமித்துள்ளன. ஆடு, மாடுகளுக்கு போதிய தீவனம் கிடைத்து வருகிறது. இதனால் கால்நடை வளர்ப்பு தொழிலில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நலிவடைந்த நிலையில் இருந்த கால்நடை வளர்ப்பு தொழில் புத்துயிர் பெற்றுள்ளது. தீவன பற்றாக்குறையால் ஆடு, மாடுகளை குறைந்த விலைக்கு விற்பனை செய்த நிலை மாறி விட்டது. அதற்கு பதிலாக, கால்நடைகளை வளர்ப்பதற்கு அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

திண்டுக்கல் அருகே உள்ள சிலுவத்தூர், ராஜாக்காபட்டி, அதிகாரிபட்டி, அக்கரைப்பட்டி, தம்பகுளத்துப்பட்டி மற்றும் அதன் சுற்று வட்டார கிராமங்களில் உள்ள மேய்ச்சல் நிலங்களில் கூட்டம், கூட்டமாக ஆடு, மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கும் காட்சியை பார்க்க முடிகிறது.

<u>பல கிலோமீட்டர் அலைச்சல்</u>

இது தொடர்பாக, ஆடுகளை மேய்த்து கொண்டிருந்த தம்பகுளத்துப் பட்டியை சேர்ந்த சன்னாசி (வயது 67) கூறியதாவது:–

கோடைக்காலம் தொடங்கி விட்டாலே ஆடுகளுக்கு போதிய தீவனம் கிடைக்காது. சுமார் 10 கிலோமீட்டர் தூரத்துக்கு மேய்ச்சலுக்கு ஓட்டி சென்றாலும் ஆடுகளின் வயிறு நிரம்பாது. ஆடுகள் பட்டினி கிடப்பதை பார்த்து, மரங்களில் இலை தழைகளை இரையாக கொடுப்போம். ஏப்ரல்,

மே மாதங்களில் ஆடுகளின் கொழு, கொழு தன்மை குறைந்து போய் எடையும் குறைந்து விடும். தீவனம் கிடைக்காமல் குறைந்த விலைக்கு ஆடுகளை விற்கும் நிலை இருந்தது. ஆனால் தொடர் மழையினால் புற்கள், செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. தற்போது ஆடுகளுக்கான தீவன பற்றாக்குறை நீங்கி விட்டது. இதேநாளில், கடந்த ஆண்டு தரிசாக கிடந்த நிலங்கள், தற்போது பச்சைப்பசேல் என்று காட்சி அளிப்பதை பார்க்கும் போது மகிழ்ச்சியாக இருக்கிறது. ஒரே இடத்தில் ஆடுகளுக்கு தேவையான தீவனம் கிடைத்து விடுகிறது. இதனால் பல கிலோமீட்டர் தூரம் அலைய வேண்டிய நிலை இல்லை. வீட்டின் அருகே உள்ள நிலங்களிலேயே மேய விட்டு கவனித்து வருகிறேன். பச்சை புற்கள், இலை, தழைகளை தின்பதால் ஆடுகளும் நல்ல திடகாத்திரமாக இருக்கின்றன. இவ்வாறு சன்னாசி கூறினார்.

**கிருஷ்ணகிரி அணை 50அடியை எட்டியது பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தல்**



கிருஷ்ணகிரி கே. ஆர்.பி. அணைக்கு நீர் வரத்து அதிகரித்து வண்ணம் இருந்ததால் அணையின் நீர் மட்டம் 50 அடியை எட்டியது. இதனால் 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்ட தால் பொதுமக்கள் பாது காப்பான இடங்களுக்கு செல்ல அதிகாரிகள் அறி வுறுத்திஉள்ளனர்.

நீர்வரத்துஅதிகரிப்பு

கர்நாடக மாநிலம் முழு வதும் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழை யால் தென்பெண்ணை ஆற்றில் தற்போது நீர் வரத்து அதிகரித்து உள்ளது. இந்த நிலையில் கடந்த சில நாட் களாக மாவட்ட முழுவதும் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்ததால் கிருஷ்ணகிரி யில் உள்ள கெலவரப்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி அணை களுக்கு நீர்வரத்து அதி

கரித்துள்ளது. மழையின் காரணமாக, ஓசூர் அருகே உள்ள கெலவரப் பள்ளி அணையின் மொத்த கொள் ளளவு 44 அடியாகும், தற்போது அணையில் 42.3 அடி தண்ணீர் உள்ளது. அணைக்கு விநாடிக்கு 600 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில், நேற்று மாலை நிலவரப் படி நீர் வரத்து 580 கன அடி என படிப்படியாக குறைந்தது. அதே நேரத்தில், 600 கன அடி தண்ணீர் வெளி யேற்றப்பட்டு வருகிறது. கர்நாடகாவில் மேலும் மழை பெய்தால், கெலவரப் பள்ளி அணைக்கு வரும் நீர்¤ன் அளவு அதிகரிக்கும். இதனால் தென்பெண்ணை ஆறு செல்லும் முத்தாலி, சின்ன முத்தாலி, தொரப்பள்ளி, பாத்தகோட்டா., உலகம், ராமாபுரம் மற்றும் சுற்றுப்புற கிராம மக்களுக்கு ஓசூர் தாசில்தார் ரவிச்சந்திரன் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளார். மேலும், தென்பெண்ணை ஆற்று கரையோரம் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.அத்துடன் தண்டோரா போட்டும் கிராம மக்களுக்கு எச்சரிக்கை விடப் பட்டுள்ளது. 50 அடி எட்டியது. இந்த தண்ணீர் தென் பெண்ணை ஆற்றின் வழியாக கிருஷ்ணகிரி அணைக்கு வருவதால் நீர் மட்டம் உயர்ந்து காணப்படுகிறது. அணை யின் மொத்த உயரம் 52 அடியில் நேற்று முன்தினம் மாலை நிலவரப்படி 50அடியை எட்டி உள்ளது. அணையில் இருந்து 627 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. இந்த அணையில் இருந்து தண்ணீர் திறக்கப் படாததால் அணை நிரம்பும் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது.

அதிகாரிகள்எச்சரிக்கை

இந்த நிலையில் கர்நாடகா வில் தொடர்ந்து மழை பெய்யக்கூடும் என்பதால் அணைக்கு வரும் தண்ணீர் மேலும் அதிகரிக்கும். எனவே தென்பெண்ணை ஆறு செல்லும் கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் ,கடலூர் ஆகிய 5 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுத் துள்ளது என்று அதிகாரிகள்

தெரிவித்தனர். மேலும் தென் பெண்ணை ஆற்றின் கரை யோரும் உள்ள பொதுமக்களை பாதுகாப்பு இடங்களுக்கு செல்ல அறிவுறுத்தி உள்ளனர்.

தி இந்து

தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>அரசு தோட்டக்கலை அலுவலர் பணிக்கு ஜூன் 1 முதல் நேர்முகத் தேர்வு : டிஎன்பிஎஸ்சி அறிவிப்பு</u>**



தோட்டக்கலை அலுவலர் பணிக்கான நேர்முகத்தேர்வு ஜூன் 1 முதல் 4-ம் தேதி வரை நடைபெறும் என்று தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டிஎன்பிஎஸ்சி) அறிவித்துள்ளது. இதுதொடர்பாக டிஎன்பிஎஸ்சி செயலாளர் மா.விஜயகுமார் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:- தோட்டக்கலை அலுவலர் பதவியில் 183 காலிப் பணியிடங் களை நிரப்பும் பொருட்டு கடந்த மார்ச் மாதம் எழுத்துத்தேர்வு நடத்தப்பட்டது. தேர்வு முடிவு வெளியிடப்பட்டு, அதைத் தொடர்ந்து சான்றிதழ் சரிபார்ப்பு ஏப்ரல் மாதம் நடைபெற்றது. சான்றிதழ் சரிபார்ப்புக்குப் பிறகு நேர்முகத்தேர்வுக்கு 361 பேர் அழைக்கப்பட்டுள்ளனர். நேர்முகத்தேர்வு ஜூன் 1 முதல் 4-ம் தேதி வரை சென்னையில் உள்ள டிஎன்பிஎஸ்சி அலுவலகத்தில் நடைபெறும். இதற்கான அழைப் புக்கடிதம் சம்பந்தப்பட்ட விண்ணப் பதாரர்களுக்கு விரைவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், டிஎன்பிஎஸ்சி இணைய தளத்தில் (www.tnpsc.gov.in) பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள அழைப்புக் கடிதத்தையும் விண்ணப்பதாரர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப் பட்டதாலேயே அவர்கள்

பணிக்கு தகுதி பெற்றுவிட்டதாக கருத முடியாது. குறிப்பிட்ட நாளில் நேர்முகத்தேர்வில் கலந்து கொள்ளத் தவறினால் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு மறு வாய்ப்பு ஏதும் வழங்கப்பட மாட் டாது. இவ்வாறு விஜயகுமார் குறிப்பிட்டுள்ளார்.